# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்
பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை
ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்
ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| மாவட்டம் : | புதுக்கோட்டை | காலம் : | 02/05/2018 | முதல் | 06/05/2018 |
|---|---|---|---|---|---|
| அறிக்கை எண் : | 034/ 2018 | வெளியீட்டு நாள் : | 01/05/2018 | | |

| கடந்த கால வானிலை 27/04/2018 முதல் 30/04/2018 வரை | |
|---|---|
| காரணிகள் | கடந்த கால வானிலை |
| மழை (மி.மீ) | 0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 38-40 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 27-29 |
| மேக மூட்டம் | 3-6 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 35-76 |
| காற்றின் வேகம்(கி.மீ. / மணி) | 5-11 |

எதிர்பார்க்கப்படும் வானிலை ( 06-05-2017 8.30 மணி வரை )

| காரணிகள் | 02-05-2018 | 03-05-2018 | 04-05-2018 | 05-05-2018 | 06-05-2018 |
|---|---|---|---|---|---|
| | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
| மழை (மி.மீ) | 3 | 4 | 6 | 8 | 15 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 39 | 39 | 39 | 40 | 40 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 27 | 27 | 27 | 27 | 27 |
| மேக மூட்டம் | 6 | 6 | 6 | 6 | 6 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 75 | 75 | 75 | 75 | 75 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 45 | 45 | 45 | 40 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 8 | 8 | 8 | 8 |
| காற்றின் திசை | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு |

**குறுஞ்செய்தி :**

வரும் 2, 3, 4ம் தேதிகளில் ஆங்காங்கே லேசான மழையும், 5 மற்றும் 6ம் தேதிகளில் மிதமான மழையும் பெய்ய வாய்ப்பு. வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 கி.மீ வேகத்தில் தென்கிழக்கு திசையில் காற்று வீசக்கூடும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : முந்திரி & (கால்நடை)**

தற்போது நிலவும் பருவநிலையில் முந்திரியில் தண்டுத் துளைப்பான் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதன் முக்கிய அறிகுறியாக மரத்தின் அடிப்பகுதியில் காணப்படும் சிறு துளைகள் அவற்றின் வழியே வெளிவரும் பிசின் போன்ற திரவம் மற்றும் புழு கடித்துப் போட்ட சக்கைகளும் காணப்படும். இதனால் மரங்களில் இலைகள் உதிர்ந்து மரம் காய்ந்து மொட்டையாகிவிடும்.இதனைக்கட்டுப்படுத்த முதலில் தோப்பை சுத்தமாக வைத்துக்கொள்ளவெண்டும். தாக்கப்பட்ட மரங்களை அப்புறப்படுத்தவேண்டும். கார்பரில் 50 சத நனையும் தூள் 0.1 சதம் மருந்தை தண்டுப்பகுதியில் சுமார் 1 மீட்டர் உயரம் வரை தடவிவிடவேண்டும்.

அதிகபட்ச வெப்பநிலை தொடர்ந்து உயர்வாக காணப்படுவதால் கால்நடைகளுக்கு நாள் ஒன்றுக்கு 80 முதல் 100 லிட்டர் தண்ணீரை 4 தவணையாக பகிர்ந்து கொடுக்கவும்.